# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 44/ந/2018

ஆணை எண். 76/2018

நாள் : 28/03/2018

திரு ம. மெய்தீன் அப்துல் காதர்,
காயல் பட்டணம்.

– முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
காயல்பட்டணம் நகராட்சி,
காயல்பட்டணம்.

– எதிர் மனுதாரர்

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டணம், எண்.168/B–5, சிவன்கோவில் தெரு முகவரியில் வசிக்கும் திரு ம. மெய்தீன் அப்துல் காதர் அவர்களின் 12.03.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.03.2018 அன்று பெறப்பட்டு 44/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு மற்றும் அவர் தாக்கல் செய்த ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டணம், எண்.168/B–5, சிவன்கோவில் தெரு முகவரியில் வசிக்கும் திரு ம. மெய்தீன் அப்துல் காதர் என்பவர், காயல் பட்டணம் நகராட்சியில் குடிநீர் வால்வுகளை சீர்செய்ததில் ஏற்பட்ட முறைகேடுகள் குறித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். அதன் விவரம் வருமாறு :-

1. நகர்மன்றத் தீர்மான எண். 1402 மற்றும் 1474–இன்படி மேற்கொள்ளப்பட்ட குடிநீர் வால்வு தொட்டிகளை சீரமைத்ததில் முறைகேடு ;
2. குடிநீர் வீண் விரயமாகுதல் ;
3. தொற்று நோய் அபாயம் ஏற்பட்ட நிலைமை.

முறையீட்டு மனுதாரர் மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ள நிலையில், முறைகேடுகளுக்குக் காரணமான அலுவலர்கள் குறித்த விவரங்களை

சமர்ப்பிக்கவில்லை. மேலும், ரூபாய் 9.70 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் வால்வு தொட்டிகளை சீரமைத்து மேல்மூடி அமைத்திடவும், ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் குழாய்களில் ஏற்பட்ட உடைப்புகளை சரி செய்திடவும் அதில் உள்ள பழைய வால்வுகளை மேம்பாடு செய்திடவும் மன்றத் தீர்மான எண்கள் முறையே 1402 மற்றும் 1474–இல் மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது என்பதற்கான தீர்மான நகல்களை சமர்பித்துள்ளார். எனினும், மேற்குறிப்பிட்ட பணிகள் முறையாக ஒப்பந்தம் விடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டனவா அல்லது அப்பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் நடைபெற்ற ஊழல் அல்லது நிர்வாக சீர்கேடு குறித்த விவரங்களை போதுமான ஆதாரங்களுடன் தாக்கல் செய்ய முறையீட்டு மனுதாரர் தவறியுள்ளார். பொத்தாம் பொதுவாக, யூகத்தின் அடிப்படையில் கூறப்படும் குற்றச்சாட்டுகளை இம்முறைமன்ற நடுவத்தின் விசாரணைக்கு உட்படுத்துவது ஏற்புடையதல்ல. ஏனவே, மேற்குறிப்பிட்டத் திட்டப்பணிகளை மேற்கொண்டதில் நடைபெற்ற ஊழல் அல்லது நிர்வாக சீர்கேடுகள் குறித்து உரிய ஆதார ஆவணங்கள் மற்றும் சாட்சிகளை குறிப்பிட்டு தாக்கல் செய்யும்படி முறையீட்டு மனுதாரருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 28–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு ம. மெய்தீன் அப்துல் காதர்,
   168 / B–5, சிவன் கோவில் தெரு,
   காயல் பட்டணம்,
   தூத்துக்குடி மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
   காயல்பட்டணம் நகராட்சி,
   காயல்பட்டணம்.

3. மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   திருநெல்வேலி.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்